**CBSE Class 10 Tamil Question Paper 2022 (May 12)**

Series : AQ@QA

SET-4

प्रश्न-पत्र कोड. Q.P. Code **10**

रोल नं. Roll No.

परीक्षार्थी कोड को उत्तर-पुस्तिका के मुख-पृष्ठ पर अवश्य लिखें ।
Candidates must write the Q.P. Code on the title page of the answer-book.

- இந்த வினாத்தாளில் அச்சிடப்பெற்ற 4 பக்கங்கள் உள்ளதைச் சரிபார்க்கவும்.
- வினாத்தாளின் வலதுபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை (Code No) விடைத்தாளின் தலைப்புப் பக்கத்தில் எழுதவும்.
- இந்த வினாத்தாளில் 24 வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும்.
- எழுதத் தொடங்குவதற்கும் முன் விடைத்தாளில் வினாவின் வரிசை எண்ணைக் குறிப்பிடவும்.
- வினாத்தாளைப் படிப்பதற்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் 10.15 க்குக் கொடுக்கப்படும் 10.15 இல் இருந்து 10.30 வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந்த நேரத்தில் விடைத்தாளில் எந்தப் பதிலையும் எழுதக்கூடாது.
- Please check that this question paper contains 4 printed pages.
- Q.P. Code given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains 24 questions.
- **Please write down the Serial Number of the question in the answer-book before attempting it.**
- 15 minutes time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the candidates will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

*

# தமிழ்
# TAMIL

*கால அளவு : **2** மணி*
*Time allowed : **2** hours*

*மொ.மதிப்பெண்கள் : **40***
*Maximum Marks : **40***



collegedunia India's largest Student Review Platform

I. பின்வரும் இலக்கண வினாக்களில் எவையேனும் நான்களுக்கு குறுகிய விடை எழுதுக. **4 × 2 = 8**

(1) இடம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

(2) வழுவமைதி என்றால் என்ன?

(3) வினாவின் வகைகளைக் கூறுக.

(4) வெளிப்படை விடைகளை வரிசையிட்டுக் கூறுக.

(5) பொருள்கோள் என்றால் என்ன?

(6) சிறுபொழுதிற்குரிய கூறுகளை வகைப்படுத்துக.

(7) ஐவகை நிலத்திற்குரிய தெய்வங்களின் பெயர்களைக் கூறுக.

II. பின்வரும் செய்யுள் வினாக்களில் எவையேனும் மூன்றனுக்குச் சுருக்கமாக விடை எழுதுக. **3 × 3 = 9**

(8) மருத்துவத்தில் மருந்துடன் அன்பும், நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

(9) சதாவதானம் பற்றிக் குறிப்பு வரைக.

(10) செங்கீரைப் பருவம் பற்றி நீவிர் அறிவன யாவை?

(11) கோசல நாட்டில் எவையெல்லாம் இல்லை? ஏன்?

(12) ஒருவன் எளிதில் பகைக்கு ஆட்பட நேரிடுவது எப்போது?

*

III. பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் இரண்டனுக்கு மட்டும் குறுகிய விடை எழுதுக. **2 × 2 = 4**

(13) செயற்கை நுண்ணறிவு நமக்கு எவ்வாறு அறிமுகமாகிறது?

(14) மொழிபெயர்ப்புக் குறித்து மணவை முஸ்தபா கூறுவது யாது?

(15) தமிழகத்தில் இன்றும் கரகாட்டம் நிகழ்த்தப்படும் மாவட்டங்கள் யாவை?

(16) தோற்பாவைக் கூத்து என்றால் என்ன?

IV. பின்வரும் உரைநடை வினாக்களில் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விரிவான விடை எழுதுக. **1 × 5 = 5**

(17) செயற்கை நுண்ணறிவு கொண்ட கணினி, மென்பொருள், இயந்திரமனிதன் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(18) மொழிப் பெயர்ப்புச் சரியாக அமையாததால் காலத்திற்கும் அழிவு தரும் கலங்கம் நேர்ந்தது – விவரி.



collegedunia
India's largest Student Review Platform

V. பின்வரும் துணைப்பாடப் பொருண்மைகளுள் ஒன்று குறித்து விரிவாக எழுதுக. **1 × 5 = 5**

(19) "விண்ணைத்தாண்டிய தன்னம்பிக்கை"

(20) பாய்ச்சல்

(21) புதிய நம்பிக்கை

VI. பின்வரும் உரைநடைப் பகுதியை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி வரைக. **1 × 4 = 4**

(22) இரட்டை ஆட்சியில், கல்வித்துறை சட்டமன்ற ஆணைக்கு உட்பட்டதால் 1920 ஆம் ஆண்டு முதல் கல்வி வாய்ப்பு அனைத்துப் பிரிவு மக்களுக்கும் கிடைக்கத் தொடங்கியது. எனினும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சமுதாயத்தில் அடிமைகளாக வாழ்ந்து வந்திருந்த மக்களுக்குக் கல்வி பற்றிய விழிப்புணர்வு தொலைந்திருந்தது. கல்வியால் தமக்குக் கிடைத்திடும் பயன்கள் அனைத்தைப் பற்றியும் அறியாதவர்களாகவே வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் தான் 1920 ஆம் ஆண்டின் கல்வி நிலை பற்றி கீழே உள்ள குறிப்புக் கூறுகிறது.

அனைத்து வகுப்பைச் சேர்ந்த மாணவர்களும் கல்லூரியில் இடம் கிடைக்காது இருந்து வந்த தடையை அகற்றுவதற்குக் கல்வி அமைச்சர் முடிவெடுத்து அதற்குரிய நடவடிக்கைளையும் உடனடியாக மேற்கொண்டார். இன்றைக்கு அனைவரும் கல்வி, கல்வியின் பயன் பற்றி அறிந்துள்ளோம் என்றால், அன்றைக்கு அந்த ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் அனைவருமே முழு முதற்காரணம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

VII. பின்வரும் பொருள்களில் ஒன்று பற்றிக் கடிதம் எழுதுக. **1 × 5 = 5**

(23) பத்தாம் வகுப்புப் பொதுத்தேரிவில் முதல் மதிப்பெண் பெற்ற உன் நண்பனைப் பாரட்டிக் கடிதம் ஒன்று வரைக.

(24) பேருந்து வசதி வேண்டி போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநருக்கு ஊர்மக்கள் சார்பாக ஒரு விண்ணப்பம் வரைக. (இரு கடிதங்களிலும் உன் முகவரி க.குமரன்/க.குமரி, 12, வள்ளலார் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை 35. எனக்கொள்க.



collegedunia.com India's largest Student Review Platform

*



collegedunia
India's largest Student Review Platform